
# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான
# இலகுவழி மாதிரிப் பரீட்சை - 07


**ஆசிரியர் : P.அம்பிகைபாகன்**

**இடம் : ACA, ஆசிரியரின் வீட்டில்**
**குழு வகுப்புக்களில்**


A,B,C,D,E **என்னும் ஐந்து எரிகின்ற மெழுகுவர்த்திகளின் படங்களை அவதானிக்கவும்.**





1. இவைகள் ஒரே நேரத்தில் மூடப்பட்டன. இவைகள் அணைகின்ற ஒழுங்கைக் காட்டும் சரியான விடையைத் தெரிவு செய்க.

   1. B,C,D,E,A    2. A,B,C,E,D    3. A,D,C,B,E


**பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிலும் முதலாவதாகத் தரப்பட்டுள்ள வடிவத்திற்குச் சமனாக அமையாத வடிவத்தை எதிரே தரப்பட்டுள்ள மூன்று வடிவங்களிலிருந்து தெரிவு செய்க.**

2.




1 2 3

3.




1 2 3

4.



1 2 3

5.




**1 2 3**

**6ஆம் 7ஆம் வினாக்களில் தரப்பட்டுள்ள எண் பிரசினங்களில் வெற்றிடத்திற்குப் பொருத்தமான எண்கள் எவை?**

6.
```
  8  6  5
  3 ......  2
 ----------
  5 ......  3
 ==========
```
1. 3, 3    2. 2, 3    3. 4, 3

7.
```
  3  3  5
  4 ......  2
 ----------
 ....... 9  7
 ==========
```
1. 5, 1    2. 6, 7    3. 7, 2

**ஞாயிறு முதல் வியாழன் வரையிலான ஐந்து நாட்களில் குமார் தான் சேமித்த பணத்தை சலாகைக் கோட்டு வரைபில் குறித்துக் காட்டினான்.**




**8 தொடக்கம் 10 வரையிலான வினாக்களுக்குரிய விடையை புள்ளிக்கோட்டில் எழுதுக.**

8. குமார் அதிகளவு பணம் சேமித்த தினம் யாது? ..................................................

9. குமார் குறைந்தளவு பணம் சேமித்த தினம் யாது? ..................................................

10. ஞாயிறு, புதன் இரு தினங்களும் சேமித்த பணத்திற்கு சமமான பணத்தை சேமித்த வேறு இரு தினங்கள் எவை? ..................................................

11. 

இவ் வீதிச் சமிக்கை '**இங்கே ஒலி எழுப்பக்கூடாது**' என்பதாகும். இதனைக் காணக்கூடிய மூன்று இடங்களின் பெயரைப் புள்ளிக்கோடுகளில் எழுதுக.

1. ............................................    2. ..........................................    3. ..................................................

**12 தொடக்கம் 15 வரையிலான வினாக்களுக்கு பொருத்தமான விடையை அடைப்புக்குள் தெரிந்து அதன் கீழ்க் கீறிடுக.**

12. பேரழிவுகளை ஏற்படுத்தும் காற்று எது? (வாடைக்காற்று, தென்றல் காற்று, சூறாவளிக் காற்று)


13. 2004 ஆம் ஆண்டு இலங்கையில் ஏற்பட்ட பேரழிவுக்கு காரணமாக அமைந்தது எது?
(உள்நாட்டு யுத்தம், கடற்பேரலை, வெள்ளப்பெருக்கு)


14. முட்டை இட்டு குஞ்சு பொரிப்பது எது?
(எலி, வௌவால், பல்லி)


15. நட்சத்திரங்கள் இரவில் தோன்றும் ஆனால் பகலில் தெரிவதில்லை. காரணம் யாது?
(சூரியவொளி மறைக்கிறது, பகலில் அழிந்து விட்டன, சந்திரவொளி மறைக்கிறது.)

**கீழுள்ள எண்கோலங்களில் ? இடப்பட்ட இடத்திற்கு பொருத்தமான எண்ணைத் தெரிவு செய்க.**

16.




1. 6    2. 5    3. 4

17. [12 / 3] — [36]   [8 / 4] — [32]   [6 / 5] — [?....]

1. 34   2. 30   3. 28

**பின்வரும் வாக்கியங்கள் கருத்துள்ளதாக அமைவதற்கு செய்ய வேண்டிய மாற்றத்தினை தெரிவு செய்க.**

18. மீனவர்கள் வயலில் மீன் பிடிக்கின்றனர்.
   1. மீனவர்கள் என்பதற்கு பதிலாக 'மாலுமிகள்' என மாற்ற வேண்டும்.
   2. வயலில் என்பதற்கு பதிலாக 'கடலில்' என மாற்ற வேண்டும்.
   3. பிடிக்கின்றனர் என்பதற்கு பதிலாக 'நீந்துகின்றனர்' என மாற்ற வேண்டும்.

19. அவலக் காட்சிகள் மனித மனத்துக்கு இன்பம் தருவன.
   1. அவல என்ற சொல்லை 'இயற்கை' என மாற்ற வேண்டும்.
   2. காட்சிகள் என்ற சொல்லை 'கூக்குரல்கள்' என மாற்ற வேண்டும்.
   3. மனித என்ற சொல்லை 'குரங்கு' என மாற்ற வேண்டும்.

**வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து புள்ளிக் கோட்டில் எழுதுக.**

20. தம்பிக்கு அண்ணா போன்று தங்கைக்கு ..................................................
   1. தம்பி   2. அண்ணா   3. அக்கா

21. கதிரையில் திரை போன்று மதுரையில் ..................................................
   1. இந்தியா   2. துரை   3. மரை

**ஒரு மின் அலங்காரச்சோடணையில் சிவப்பு, பச்சை, மஞ்சள் என மூன்று வகையான மின்குமிழ்த் தொடர்கள் ஒழுங்கில் ஒளிர்ந்து கொண்டிருந்தன.**

22. அவற்றுள் 18 ஆவது மின்குமிழின் நிறம் யாது?
   1. சிவப்பு   2. பச்சை   3. மஞ்சள்

23. அச்சோடணைத் தொடரில் 28 மின் குமிழ்கள் காணப்பட்டன ஆயின் அங்கிருந்த சிவப்பு நிற மின்குமிழ்களின் எண்ணிக்கை யாது?
   1. 9   2. 10   3. 12

**ஒரு பண்ணையில் உள்ள மாடுகளினதும், கோழிகளினதும் எண்ணிக்கை 12 ஆகும். அவற்றின் கால்களின் எண்ணிக்கை 32 ஆகும்.**

24. பண்ணையில் உள்ள கோழிகளின் எண்ணிக்கை யாது?
   1. 4   2. 8   3. 12

25. பண்ணையில் உள்ள மாடுகளின் எண்ணிக்கை யாது?
   1. 4   2. 8   3. 12

**26ஆம் 27 ஆம் வினாக்களில் பாடல்வரிகள் ஒழுங்கமைந்த விடையைத் தெரிவு செய்க.**

26. A பயிரைச் செய்தல் போலக்   B காலம் பார்க்க வேண்டும்
    C பருவம் பார்த்து நாங்கள்   D கருமம் தொடங்கும் போது
   1. DBCA   2. CADB   3. ADBC

27. ○ கசியும் பசுவைப் போல
    □ கன்றை நினைந்தே உள்ளம்
    △ நாமும் நினைக்க வேண்டும்
    ✱ நன்றி புரிந்தோர் தம்மை

   1. □ ○ ✱ △   2. ✱ △ □ ○   3. □ ✱ ○ △

**அன்று போயா விடுமுறை தினம் எனது நண்பர்களுடன் பட்டம் விடுவதற்காக காலிமுகத்திடலுக்கு சென்றேன். அங்கே ஏராளமான சனக்கூட்டம் காணப்பட்டது. ஆகாயம் பல வர்ணப் பட்டங்களால் அலங்காரமாகக் காட்சியளித்தது. நாமும் எமது பட்டத்தை.................**

இதனைத் தொடர்ந்து மூன்று கருத்துள்ள வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியத்திலும் குறைந்தது ஐந்து சொற்களாவது இடம்பெறுதல் வேண்டும். அவ்வாக்கியங்களின் எழுவாய், பயனிலைத் தொடர்பு திருத்தமாக இருத்தல் வேண்டும்.)

28. ..........................................................................................................................................................

29. ..........................................................................................................................................................

30. ..........................................................................................................................................................

**பின்வரும் வினாக்களின் வாக்கியங்களில் பொருத்தமான அடைமொழிகளை புள்ளிக்கோட்டில் எழுதுக.**

31.. பேச்சாளர் பேசிக் கொண்டிருந்த போது ஒலிபெருக்கி வேலை செய்யாததால் அவர் .................................... பேசினார்.

32. ஓவியப் போட்டியில் எல்லோரும் வரைந்த படங்களை விட நான் ........................................ படமே அழகாக இருந்தது.

33. காட்டின் நடுவில் உள்ள .................................... குளத்தில் தவளை ஒன்று வசித்து வந்தது.

**கீழுள்ள பழமொழிகளுக்கு பொருத்தமான சொல்லை எழுதி பூரணமாக்குக.**


34. குற்றம் பார்க்கில் ............................................................................ இல்லை.

35. அன்பான ................................................................. ஆபத்தில் அறியலாம்.

36. அடக்கம் ஆயிரம் ............................................................................ தரும்.

**பின்வரும் வட்ட வரைபை அடிப்படையாகக் கொண்டு விடை எழுதுக.**

**பாடசாலை ஒன்றின் 60 மாணவர்களின் காலை உணவாக விரும்பும் உணவு வகைகள்.**




37. இடியப்பத்தை விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கை யாது? (.........................................................)

38. தோசையை விரும்பும் மாணவர்கள் எண்ணிக்கை 10 ஆயின் பாணை விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கை யாது? (.........................................................)

39. இட்லியை விரும்பும் மாணவர்களின் பங்கை பின்னத்தில் குறிப்பிடுக. (.........................................................)

40. குறைந்தளவு மாணவர்கள் விரும்பும் உணவு எது? (.........................................................)